முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1302

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

23.04.2023, ஞாயிற்றுக்கிழமை

1. அறம்வேலிகொண்ட அண்ணலே
   ஆறுமுகனாய் வாழும் என் அவதாரமே
   வரம்பல தந்து சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
2. ஆசிதனை சோபகிருது தகர் திங்கள்
   (சோபகிருது வருடம் சித்திரை மாதம் 10 ம் நாள், 23.04.2023 ஞாயிற்றுக்கிழமை)
   அரங்கனுக்கு இன்னும் சக்தி கூட உரைப்பேன்
   வாசிவென்ற ஞானியர் படைகள்
   வையகத்தில் அரங்கனை பாதுகாத்துவர
3. வருகவே அரங்கனுக்கு எந்தசக்தியாலும்
   வையகத்தில் இடரென்பது இல்லையப்பா
   தர்மமாக அரங்கன் உலகை நோக்கி தருகின்ற
   தவபலத்தின் சக்தி அனைத்துமே
4. வருங்காலத்தில் ஞான வழிகளுக்கு மாற்றி
   வையகத்தையே ஞானவான்கள் ஆளுகின்ற வண்ணம்
   பெருமைமிக்க ஞான பூமியாக்கி
   பேருலக மாந்தர்களையெல்லாம் ஞானிகளாக மாற்றி
5. மாற்றியே அற்புதம் அரங்கன் சக்தி
   மண்ணுலகில் உயர்வாக செய்யக்கூடும்
   கூடவே அரங்கன் சக்தியே குவலயத்தில்
   ஆறுமுகன் யான் விரும்பித்தருகின்ற யோகசக்தியாகும்
6. பெருமைபட அரங்கன் சீடர்களென பேருலகில் இன்னும் நிலைகள் பெருகப்பெருக
   பெருகவே உலகம் இயற்கையாக பல அற்புதங்களை உயர்வாக வளர்ச்சியாகக் கண்டு மாறக்கூடும்
   தர்மவான்களாய் எங்கும் நிரம்பி இனிதே
   தரணியே சர்வ பாதுகாப்புக் காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–